# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**********

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032**
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),**
**முறையீட்டு மனு எண்: 119/2018/பே நாள்**

**ஆணை நாள். 26 –07–2018**

*********

**22.05.2018ம் நாளிட்ட காலைக்கதிர் நாளிதழ் செய்தி.** — **இம்முறை மன்ற நடுவம் தாமாகவே முன் வந்து வழக்காக பதிவு செய்தது**

**1.செயல் அலுவலர்,**
**கொளப்பலூர் பேரூராட்சி,**
**ஈரோடு மாவட்டம்.**
**2.இளநிலை உதவியாளர்,**
**கொளப்பலூர் பேரூராட்சி.** — **எதிர் மனுதாரர்கள்.**

## ஆணை.

22.05.2018ம் நாளிட்ட "காலைக்கதிர்" நாளிதழ் செய்தியில் ஈரோடு மாவட்டம், கொளப்பலூர் பேரூராட்சியில் தனி நபர் கழிப்பிடம் கட்டியதில் முறைகேடு என தலைப்பிட்டு வெளிவந்துள்ள செய்தியினை, 2014ம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் பிரிவு 7(i)ல் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி இம்முறைமன்ற நடுவம் தாமாகவே முன்வந்து முறையீடாக பதிவு செய்து, மேற்படி முறையீட்டிற்கு முறையீட்டு மனு எண். 119/2018 என எண்ணிடப்பட்டது. மேற்படி முறையீட்டு மனு மீது அறிக்கை பெறப்பட்டு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

மேற்படி செய்திக்குறிப்பில் ஈரோடு மாவட்டம், கொளப்பலூர் பேரூராட்சியில் 2017–18ம் ஆண்டில் 557 தனி நபர் கழிப்பிடப் பணிகள் ஒதுக்கப்பட்டதாகவும், மேற்படி பணிகளில் 209 பணிகள் கட்டி முடிக்கப்பட்டதாகவும், இதில் 150க்கும் மேற்பட்ட பணிகள் புதிதாக கட்டப்படவில்லை, பழைய கழிப்பிடங்களை காட்டி மோசடி நடைபெற்றுள்ளதாகவும் இதற்கு இப்பேரூராட்சியில் செயல் அலுவலராக பணிபுரிந்த திரு ராமகிருஷ்ணன் மற்றும் இளநிலை உதவியாளர் திரு.சரவணகுமார் ஆகியோர் ஏற்கனவே கட்டிய கழிப்பிடத்தினை ரூ.3,000/– முதல் ரூ.5,000/– பெற்றுக் கொண்டு கழிப்பிடப் பணிகள் புதியதாக கட்டியதாக கணக்கு காட்டி சம்பந்தப்பட்டவர்களுக்கு அரசு மான்யம் விடுவித்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்முறைமன்ற நடுவ 30.05.2018ம் நாளிட்ட அறிவிப்பாணையில் மேற்படி பத்திரிக்கை செய்தி தொடர்பான விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்கத் தெரிவித்து கொளப்பலூர் பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

கொளப்பலூர் பேரூராட்சி செயல் அலுவலர் நாளிடப்படாத தனது அறிக்கையினை (இம்முறைமன்ற நடுவத்தில் 27.06.2018ல் பெறப்பட்டது) கீழ்க்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

22.05.2018ம் நாளிட்ட காலைக்கதிர் நாளிதழில், ஈரோடு மாவட்டம், கொளப்பலூர் பேரூராட்சியில் செயல் அலுவலராக பணிபுரிந்து, தற்போது ஜம்பை பேரூராட்சியில் பணிபுரியும் திரு.ராமகிருஷ்ணன், மற்றும் திரு.சரவணகுமார் ஆகியோர் மீது தெரிவிக்கப்பட்டுள்ள உண்மைக்கு புறம்பான செய்தி என தெரிவித்து தனது அறிக்கையினை சமர்ப்பிப்பதாக தெரிவித்துள்ளார்.

தனி நபர் இல்லங்களில் கழிப்பிடங்கள் கட்டும் திட்டத்தினை செயல்படுத்துவதற்கு கொளப்பலூர் பேரூராட்சிக்கு கீழ்க்கண்டவாறு அரசு மான்யம் பெறப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ.எண். | தொகை வரப்பெற்ற நாள் | அரசு மான்யத் தொகை. ரூ |
|---|---|---|
| 1. | 18.05.2016 | 10,00,000-00 |
| 2. | 01.06.2016 | 7,44,000-00 |
| 3 | 03.01.2018 | 5,00,000-00 |
| 4. | 12.02.2018 | 7,28,000-00 |
| 5. | 27.02.2018 | 3,64,000-00 |
| மொத்தம் | | 33,36,000-00 |

மேற்காணும் தொகை, ஈரோடு பெரியார் நகரில் உள்ள இந்தியன் ஓவர்சீஸ் வங்கி கிளையில் கணக்கு எண்.083401000101842‌8ல் வரவாக வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈரோடு மாவட்டம், கொளப்பலூர் பேரூராட்சிக்கு 2017ம் நிதியாண்டிற்கு 556 தனி நபர் கழிப்பிடங்கள் கட்டுவதற்கு இலக்கு அனுமதிக்கப்பட்டு, 365 கழிப்பறைகள் முழுமையாக கட்டி முடிக்கப்பட்டுள்ளதாக தனது அறிக்கையில் பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

கொளப்பலூர் பேரூராட்சியில் உள்ள 15 வார்டுகளிலும் உள்ள பொதுமக்களுக்கு தனி நபர் கழிப்பிடம் கட்டுவதற்கு ரூ.8,000/- வீதம் அரசு மான்யம் வழங்கவுள்ள திட்டம் குறித்து பொதுமக்களுக்கு விரிவான விளம்பரம் செய்யப்பட்டு பொது மக்களிடமிருந்து 556 விண்ணப்பங்கள் இணையதளம் வழியாக பெறப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இணையதளம் மூலம் பெறப்பட்ட ஒவ்வொரு விண்ணப்பதாரர்களுக்கும் தனித்தனியே அங்கீகார அனுமதி I.D. எண் வழங்கப்பட்டு அவர்களுக்கு தனி நபர் இல்ல கழிப்பிடம் கட்டிக் கொள்ள அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாகவும், தனி நபர் இல்லக் கழிப்பிடம் கட்டிக் கொள்ள விண்ணப்பித்துள்ளவர்கள் ஒவ்வொருவரிடமும் தங்களது வங்கி கணக்கு விவரங்கள், ஆதார் எண், குடும்ப அட்டை விவரங்கள் மற்றும் கழிப்பிடங்கள் கட்டும் காலி இடத்தின் புகைப்படம் ஆகிய அனைத்தும் பெறப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

இரண்டாம் கட்டமாக கழிப்பறைக்கு குழாய் பதித்தவுடன் புகைப்படம் எடுத்துக் கொடுத்த பின்னரும், மீண்டும் கழிப்பிடம் கட்டி முடிக்கப்பட்டமைக்கான புகைப்படங்களை

அளித்த பின்னர் பணி மேற்பார்வையாளர் மற்றும் உதவிப் பொறியாளரின் நேரடி ஆய்விற்குட்படுத்தப்பட்டதாகவும் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மேலும் தனி நபர்களின் புவியியல் சார்ந்த விவரங்களையும் கழிப்பிடம் கட்டி முடிக்கப்பட்டதற்கான புகைப்படங்களை உள்ளடக்கிய விவரங்கள் புவியியல் சார்ந்த விவரங்களுடன் இணையதளத்தில் பதிவேற்றம் செய்த பின்னர் பணி மேற்பார்வையாளர் மற்றும் உதவிப் பொறியாளர் ஆகியோர் நேரடி ஆய்வு மேற்கொண்டு சான்றளித்த பின்னரே பயனாளிகளுக்கு மின்னணு பரிவர்த்தனை மூலம் பேரூராட்சியால் தொகை சம்பந்தப்பட்டவர்களது வங்கி கணக்கில் நேரடியாக சரிகட்டப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

மேலும் கொளப்பலூர் பேரூராட்சியல் தனி நபர் கழிப்பிடம் கட்டி முடித்த நபர்களுக்கு கீழ்கண்ட விவரப்படி தொகை வழங்கப்பட்டுள்ள விவரத்தினையும் பேரூராட்சி செயல் அலுவலர் தனது அறிக்கையில் கீழ்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

| தனி நபர் கழிப்பிடம் (IHHL) கட்டி முடிக்கப்பட்ட பயனாளிகளுக்கு மான்யம் ரூ.8,000/- வீதம் தொகை வழங்கப்பட்ட விவரம். | | | | | |
|---|---|---|---|---|---|
| வ.எண். | நாள் | பயனாளிகளின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட தொகை | செலவு சீட்டு எண்/நாள் | காசோலை எண் |
| 1. | 31.08.2016 | 40 | 3,20,000 | 290/31.08.2016 | 403915 |
| 2. | 26.10.2016 | 1 | 8,000 | 351/26.10.2016 | 403951 |
| 3. | 07.11.2016 | 2 | 16,000 | 371/07.11.2016 | 403954 |
| 4. | 20.01.2017 | 1 | 8,000 | 468/20.01.2017 | 406959 |
| 5. | 07.02.2017 | 8 | 64,000 | 497/07.02.2017 | 403962 |
| 6. | 01.03.2017 | 43 | 3,44,000 | 553/01.03.2017 | 403970 |
| 7. | 31.03.2017 | 1 | 8,000 | 631/31..3.2017 | 403978 |
| 8. | 16.06.2017 | 26 | 2,08,000 | 126/16.06.2017 | 403987 |
| 9. | 12.01.2018 | 4 | 32,000 | 515/12.01.2018 | 320204 |
| 10. | 14.02.2018 | 12 | 96,000 | 583/14.02.2018 | 320207 |
| 11. | 21.02.2018 | 62 | 4,96,000 | 591/21.02.2018 | 320208 |
| 12. | 23.04.2018 | 100 | 8,00,000 | 29/23.04.2018 | 320215 |
| 13. | 24.04.2018 | 65 | 5,20,000 | 30/24.04.2018 | 320216 |
| மொத்தம் | | 365 | 29,28,000 | | |

மேலும் பயனாளிகளின் சம்மதத்தின் பேரில் கழிப்பிட பணிகளை செய்ய இயலாதவர்களுக்கு திரு. யுவராஜ் என்பவர் மூலம் 16 கழிப்பிடங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டதாகவும், கழிப்பிட பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்ட நிலையில் 16 பயனாளிகளிடமும் புகைப்படங்கள் பெற்றுக் கொண்ட பின்னர் பணி மேற்பார்வையாளர் மற்றும் உதவிப் பொறியாளர் ஆகியோர் சான்றளித்த பின்னர் 16 கழிப்பிடங்களுக்கும் தொகை ரூ.1,28,000/- வழங்கப்பட்டுள்ளதாகவும் இதில் எவ்வித முறைகேடுகளும் இல்லை எனவும் பேரூராட்சி செயல் அலுவலர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மேலும் 34 பயனாளிகள் கழிப்பிடம் கட்டுவதற்கு மிகவும் தாமதம் செய்ததால் ஜே.பி.கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் என்ற நிறுவனத்தின் மூலம் பயனாளிகளே கழிப்பிடம் கட்டிக் கொள்ள சம்மதித்ததால் அந்த 34 பயனாளிகளுக்கு மட்டும் பகுதி தொகையாக ரூ.4,000/- வீதம்

ரூ.1,36,000/– ஐ செலவு சீட்டு எண்.32/24.04.2018ன்படி வழங்கப்பட்டுள்ளதாகவும் இதில் எவ்வித முறைகேடுகளும் இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே கொளப்பலூர் பேரூராட்சியில் 365 கழிப்பிடப் பணிகள் முழுமையாக கட்டி முடிக்கப்பட்டதாகவும், 34 கழிப்பிடப் பணிகள் நடைபெற்று வருவதாகவும் கொளப்பலூர் பேரூராட்சி செயல் அலுவலர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளதோடு, காலைக்கதிர் நாளேடு செய்தியில் எந்தவிதமான உண்மையும் இல்லை எனவும் உண்மைக்கு புறம்பான தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளது எனவும் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

கொளப்பலூர் பேரூராட்சியில் 2017ம் நிதியாண்டிற்கு 556 தனி நபர் கழிப்பிடப் பணிகளுக்கான ஒதுக்கீடு பெறப்பட்டு, அதற்கான தொகையும் பெறப்பட்டு, அத்தொகை அரசுடைமையாக்கப்பட்டுள்ள வங்கியான இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, பெரியார் நகர், ஈரோடு கிளையில் வரவாக வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் குறித்து பொதுமக்களுக்கு விரிவான விளம்பரம் செய்யப்பட்டு, பொதுமக்களிடமிருந்து மனுக்கள் அனைத்தும் இணையதளத்தின் மூலம் பெறப்பட்டுள்ளதாகவும், பெறப்பட்டுள்ள மனுக்களுக்கு தனித்தனியாக அடையாள அங்கீகார எண்கள் கொடுக்கப்பட்டு, பணிகள் முடிக்கப்பட்டதும் அதற்கான புகைப்படம் பெறப்பட்டு பணி மேற்பார்வையாளர் மற்றும் உதவிப் பொறியாளரால் பணிகள் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு சான்றுபெறப்பட்ட பின்னரே அரசு மான்யம் சம்பந்தப்பட்டவர்களின் வங்கி கணக்குகளில் பேரூராட்சி மூலம் செலுத்தப்பட்டமைக்கான ஆவணங்களை பேரூராட்சி செயல் அலுவலர் சமர்ப்பித்துள்ளார். இருப்பினும் ஜே.பி.கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் என்ற நிறுவனத்திற்கு 34 பயனாளிகளுக்கு கழிப்பிடம் கட்டும் பணிக்காக தலா ரூ.4,000/– வீதம் ரூ.1,36,000/– வழங்கப்பட்டுள்ளமை குறித்து உரிய விளக்கங்கள் பெற்று துறைவாரியான நடவடிக்கைகள் மேற்கொள்ள பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களுக்கு தெரிவித்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2018ம் ஆண்டு ஜூலைத் திங்கள் 26 –ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிடப்பட்டு இவ்வாணையிடப்படுகிறது.

-//ஒப்பம்//–

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

–//உத்திரவின்படி – அனுப்பப்படுகிறது//–

17/8/2018

செயலாளர்.

b/ 13818

15/8/18

பெறுநர்

1.செயல் அலுவலர்,
கொளப்பலூர் பேரூராட்சி,
ஈரோடு மாவட்டம்.

2.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
ஈரோடு மண்டலம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
ஈரோடு.